# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
## விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்

(குறிப்பு:- இந்த விதிமுறைகளில் காணப்படும் ஆண்பாற் சொற்கள் தேவைப்படும் இடங்களில் பெண்பாலரையும் குறிக்கும்.)

**1. விண்ணப்பிக்கும் முறை**

(1) விண்ணப்பதாரர்கள் தபால் நிலையங்களிலிருந்தோ அல்லது தேர்வாணைய அலுவலக விண்ணப்ப விற்பனைப் பிரிவிலிருந்தோ பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தட்டச்சு செய்யப்பட்டதும், அச்சிடப்பட்டதும், ஒளிநகலிடப்பட்டதும் அல்லது புகைப்பட நகல் எடுக்கப்பட்டதுமான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

---

**"ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்தல்"**

விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்தினை தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் மூலமாக விண்ணப்பத்தினைப் பதிவு செய்யும் முன் அஞ்சலகப் பற்றுச்சீட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும். தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்குக் கோருபவர்கள் விண்ணப்பக்கட்டணத்திற்குரிய அஞ்சலகப் பற்றுச்சீட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இவ்வறிவிக்கை / விளம்பரம், தகவல் சிற்றேடு மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் உள்ள அறிவுரைகள் பொருந்தும். ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் தேவையான சான்று நகல்களுடன் (சான்றொப்பமிடப்பட்டது) அஞ்சலகப் பற்றுச் சீட்டு விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்பட்டு வந்து சேரவேண்டிய கடைசி நாளுக்குள் தேர்வாணையத்திற்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும்.கடைசி நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கும் வசதி, விண்ணப்பங்கள் பெறும் கடைசி நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக முடிவடையும்.

---

(2) ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் நீலம் அல்லது கருப்பு மை பந்து முனை (Ball Point) பேனாவினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கட்டத்திற்குள் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தினை மையினால்இடவேண்டும். மேற்குறிப்பிட்டவாறு கையொப்பமிடப்படாத விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும்.

(4) விண்ணப்பப்படிவத்துடன் இரண்டு உறைகள் (உள் உறை ஒன்றும் வெளிஉறை ஒன்றும்) இணைத்து வழங்கப்படும். முழுமையாக நிரப்பப்பட்டு தேர்வுக் கட்டணம் செலுத்தியதற்கான அஞ்சலகப் பற்றுச்சீட்டு, விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்பட்டு கையொப்பமிடப்பட்டு, நிழற்படங்கள் ஒட்டப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை உள்உறையில் இடவேண்டும். இந்த உறை அதன் பின்பு பெரிய வெளி உறைக்குள் இடப்பட்டு அது தேர்வாணைய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

(5) ஓர் உள் உறை/ வெளி உறையில் ஒரு விண்ணப்பதாரரின் விண்ணப்பம் மட்டுமே இடப்படவேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு உரிய உறையில் வேறு விண்ணப்பதாரர் எவருடைய விண்ணப்பமும் இணைத்தனுப்பப்படக்கூடாது.

(6) தேர்வாணைய அறிவிக்கை / விளம்பரம் / தகவல் சிற்றேடு மற்றும் இந்த விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பப் படிவத்தைச் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பி, தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் அனுப்புவதும் தேர்வின் ஒரு பகுதியாக அமையும்.

(7) நிர்ணயிக்கப்பட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ விண்ணப்பங்கள் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலருக்கு வந்து சேர வேண்டும். அந்தத் தேதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள், கையொப்பம் இடப்படாத விண்ணப்பங்கள், உரிய படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள், சரியாகவும் முழுமையாகவும் நிரப்பப்படாத விண்ணப்பங்கள், இந்த விதிமுறைகளிலும், தேர்வாணையத்தின் அறிவிக்கை/விளம்பரத்திலும் தகவல் சிற்றேட்டிலும் காணப்படும் நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப்படாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஆகியவை குறைபாடு உடையனவாகக் கருதப்பட்டு தள்ளுபடி செய்யப்படும்.

**2. தகுதிக்கான பொதுவான நிபந்தனைகள்**

**(அ) விண்ணப்பதாரரின் குடியுரிமை குறித்து :-**

(1) இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது

(2) நேபாளம் அல்லது பூட்டான் அரசின் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது

(3) இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துடன் 1962 ஜனவரி 1 ஆம் தேதிக்கு முன்பு திபெத்திலிருந்து இந்தியாவிற்கு வந்துவிட்ட அகதியாக இருத்தல் வேண்டும் அல்லது

(4) இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு பாகிஸ்தான், பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம், கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான கென்யா, உகாண்டா, தான்சானியா ஐக்கியக் குடியரசு (முன்னாள் தங்கனிகா மற்றும் சான்சிபார்), ஜாம்பியா, மாலவி, சயர், எதியோப்பியா ஆகியவற்றின் ஏதாவதொன்றிலிருந்து இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்குடன் இடம் பெயர்ந்து வந்தவராக இருத்தல் வேண்டும்.

(5) மேற்கூறிய மூன்றாம் அல்லது நான்காம் வகையைச் சேர்ந்த விண்ணப்பதாரர் அல்லது நேபாளத்தின் அல்லது பூட்டான் அரசின் குடிமகன் ஒருவர் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழைப் பெற வேண்டும்.

(6) தகுதிச் சான்றிதழ் பெற வேண்டிய விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வுக்கு அல்லது நேர்முகத் தேர்வுக்கு (Interview) அனுமதிக்கப்பட்டு, தேவையான சான்றிதழ் தமிழ்நாடு அரசாங்கத்தால் அவருக்கு வழங்கப்படுவதற்கு உட்பட்டு, அவருக்குத் தற்காலிகமாக நியமனம் வழங்கப்படும்.

**(ஆ) ஒழுக்கம் / முன்வரலாறு குறித்து**

நியமிக்கப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும், முன்வரலாறும் (Antecedents) அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

**(இ) இருதார மணம் குறித்து**

ஆண்விண்ணப்பதாரர், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் பெண்ணாக இருப்பின், ஏற்கனவே மனைவியுடன் வாழும் ஒருவரைத் திருமணம் செய்தவராக அவர் இருத்தல் கூடாது.

**(ஈ) இந்திய நாட்டின் மத்திய / மாநில அரசுப் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்கள்**

நேரடி நியமனம் செய்யப்படுவதற்குத் தேர்வாணையத்தின் அறிவிக்கை / விளம்பரம் நாளன்று அவர் இந்திய நாட்டின் மத்திய அரசுப் பணியிலோ அல்லது மாநில அரசுப் பணியிலோ இருக்கக்கூடாது.

**குறிப்பு**:- இவ்விதியைப் பொறுத்தமட்டில் கீழ்க்கண்டவர்கள் மத்திய அல்லது மாநில அரசுப்பணியில் இருப்பவராகக் கருதப்பட மாட்டார்கள்.

(i) அவர்கள் மத்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசுப்பணியில் முதலில் சேர்ந்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடித்திருக்கக்கூடாது அல்லது

(ii) அவர்கள் ஆதிதிராவிட வகுப்பினராகவோ, ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினராகவோ, பழங்குடியினராகவோ, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினராகவோ அல்லது இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவோ மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய வகுப்பினராகவோ இருக்க வேண்டும்.

**3. திடமான உடல் நலமும் பிறவும்**

விண்ணப்பதாரர், திடமான உடல் நலமும், சுறுசுறுப்பும், நலம் பயக்கும் பழக்கவழக்கங்களும் உடையவர் என்றும், பணிக்குத் தகுதியில்லாதவராகச் செய்யும் எந்தவொரு உடற்குறைபாடு அல்லது வலுக்குறை இல்லாதவர் என்றும் அவர் தன்னைப் பணியில் நியமனம் செய்யும் அதிகாரியை ஐயமறத் தெளிவுகொள்ளச் செய்ய வேண்டும்.

**4. வயது வரம்பு**

தேர்வாணைய அறிவிக்கை/விளம்பரத்தில் குறிப்பிடப்படாத வரையில் காலியிடம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜூலை மாதம் முதல் தேதியில் 18 வயதினை நிறைவு செய்யாதவர்., கருணை அடிப்படையிலான நியமனம் உள்ளிட்ட யாதொரு பணி தொகுதிக்கும் நேரடி நியமனம் மூலமாக நியமனம் செய்யப்பட தகுதியற்றவராவார். இருப்பினும், தேர்வாணைய அறிவிக்கை/ விளம்பரத்தில் வேறு ஏதேனும் குறைந்தபட்ச வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அந்த குறைந்த பட்ச வயது வரம்பே அத்தெரிவிற்குப் பொருந்தும்.

ஆதிதிராவிடர் வகுப்பினர் (Scheduled Caste) அல்லது ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் (Scheduled Tribes) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் (Most Backward Classes/Denotified Communities) அல்லது இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் Backward Classes (other than Muslim) அல்லது பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமிய) வகுப்பினை சேர்ந்த ஒரு விண்ணப்பதாரர் அல்லது எந்த ஒரு சாதியையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட பொதுக் கல்வித் தகுதியைப் பெற்றவராயிருந்து, நியமிக்கபடுவதற்கு மற்றபடி தகுதியுடையவராக இருந்தால், நியமிக்கப்படுவதற்காக அதிகபட்ச வயது வரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அந்த வயது வரம்பு அவருக்குப் பொருந்தாது.

**குறிப்பு:-**

(i) புகுமுக வகுப்புத் தேர்வு (Pre-University Examination) அல்லது மேல்நிலைக் கல்வித் தேர்வு அல்லது தமிழ்நாடு அரசின் தொழில் நுட்பக் கழகம் மற்றும் பயிற்சிக் குழுமம் அல்லது தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / குழுமம் அல்லது பிற மாநில அரசு, மைய அரசினால் வழங்கப்பட்ட பட்டயப்படிப்பு சான்றிதழ் பெற்றவர்கள் குறைந்த பட்ச கல்வித்தகுதியைக் காட்டிலும் கூடுதலான கல்வித்தகுதியைப் பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

(ii) பல்கலைக் கழகத்தில் புகுமுகத் தேர்வில் (Pre-University Examination) அல்லது மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அல்லது பட்டயப்படிப்பில் இரண்டு பகுதிகளில் அல்லது ஒரு பகுதியில் மட்டும் தேறியுள்ள விண்ணப்பதாரர், குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருப்பதாகக் கருதப்படமாட்டார்.

ஒரு பதவிக்கு நேரடி நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி, குறைந்த அளவுப் பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்டதாக இல்லாதிருந்தால், குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட பொதுக் கல்வி தகுதி பெறாத ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் அல்லது எந்த ஒரு சாதியையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கான வயது வரம்பு, அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பைக் காட்டிலும் ஐந்து ஆண்டுகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(இஸ்லாமியர்) பொறுத்தமட்டில் இரண்டு ஆண்டுகளும் கூடுதலாக்கப்படும்.

**குறிப்பு:-** **"ஆதரவற்ற விதவை"** என்பது அனைத்து வழியிலிருந்தும் மொத்த மாத வருமானமாக ரூ.4,000/-ஐ (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மிகாத தொகையைப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று அனுப்ப வேண்டும். விவாகரத்து பெற்றவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

## 5. இதர நிபந்தனைகள் :

(1) விண்ணப்பதாரர் ஒருவரைப் பணிக்குத் தேர்வாணையம் தெரிந்தெடுப்பதாலேயே அவர் அப்பதவியில் நியமிக்கப்படுவதற்கு உத்தரவாதமளிப்பதாகாது.

(2) விளம்பரப்படுத்தப்படும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் எந்த ஆண்டிற்குரியவையோ, அதே ஆண்டிற்குரிய காலிப்-பணியிடங்களில் மாறுதல் ஏற்பட்டால் எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்கு வாய்மொழித் தேர்விற்கு விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முன்பும், எழுத்துத் தேர்வின் அடிப்படையில் மட்டுமே தெரிவு செய்யப்படும் பதவிகளுக்கு நியமனத்திற்கு தெரிவு செய்வதற்கு முன்பும்,அப்போதைய லியிடங்களின் நிலைமைக்கு ஏற்ப அறிவிக்கப்பட்ட காலிப் ணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும்.

ண்ணப்பத்தைத் தாக்கல் செய்த பிறகு ஒரு விண்ணப்பதாரர், ன் ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது ஆதிதிராவிடர் ப்பினர்(அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் ்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இஸ்லாமியர் ல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட ப்பினர்(இஸ்லாமியர்) என்றோ அல்லது ஓர் உயர்ந்த அல்லது கூடுதல் கல்வித் தகுதியைப் பெற்றவர் என்றோ அவரால் எழுப்பப்படும் கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(4) விண்ணப்பங்களில் கொடுக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பதாரர்கள் கோரும் வயது, சமூகப் பிரிவு, பொதுக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வித் தகுதிகள் ஆகியவை ஏற்கப்படுகின்றன. எனவே, மேற்சொன்ன தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெளிந்து கொள்ளும் வரை அவர்களின் விண்ணப்பங்கள் தற்காலிகமாக மட்டுமே ஏற்கப்படும். நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவதால் அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக அவரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமையளிக்கப்பட்டவராகமாட்டார். எனவே, எல்லா நிலைகளிலும் விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

(5) தேர்வு எழுதத் தகுதியுடையவர் என்று கருதும் விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பம் செய்து தமது சுய பொறுப்பில்தான் தேர்வினை எழுதுகிறார்கள். எனவே, தேர்வு எழுதுவதற்கு முன்னால் பதவிக்குரிய அறிவிக்கை நாளன்று விதிகளில் உள்ளபடி வயது, கல்வித் தகுதி, வாய்ப்புகளின் எண்ணிக்கை முதலிய அனைத்து நிபந்தனைகளையும் தாம் நிறைவேற்றுவதை விண்ணப்பதாரர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். தகுதியில்லாத விண்ணப்பதாரர்களின் பணிவேட்புத் தகுதி, தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பும் கூட இரத்து செய்யப்படத்தக்கது.

(6) நியமனத்திற்குப் போட்டியிடத் தகுதியுடையவர் எனத் தேர்வாணையத்தால் கருதப்படும் விண்ணப்பதாரர் சென்னை அல்லது இம்மாநிலத்தின் வேறு ஏதேனும் மையத்தில் நேர்காணலுக்கு வருமாறு ஆணையத்தால் அழைக்கப்பட்டால் அவர் தனது சொந்த செலவில் வருவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(7) போதுமான மற்றும் ஏற்கத் தகுந்த காரணங்கள் இருந்து மறுமுறை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் எனத் தேர்வாணையம் கருதினால், விடைத் தாள்களை மறுமுறை திருத்தம் செய்வதற்குரிய உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

## 6. நியமன ஒதுக்கீடு

ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(இஸ்லாமியர்) இட ஒதுக்கீடு விதிகள் பொருந்துகின்ற இடத்திலெல்லாம், ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை வரை எந்த அளவு தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கிடைக்கின்றார்களோ அந்த அளவு தெரிவு செய்யப்படும்.

ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த (இஸ்லாமிய) விண்ணப்பதாரர்களும் பொதுமுறைகளின் (General Turns) மூலம் நிரப்பப்படும் காலியிடங்களுக்குத் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். அவ்வாறு பொதுமுறைகள் மூலம் நிரப்பப்படும் காலியிடத்திற்கு தகுதியின் அடிப்படையில் ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், இஸ்லாமியர்அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த (இஸ்லாமிய)விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், அவரது வகுப்புக்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடத்தின் எண்ணிக்கை எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது.

நேரடி நியமனத்தில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட முப்பது சதவீத காலியிடங்களில் பத்து சதவீத இடங்கள் திருத்திய சம்பள ஏற்றமுறையில் குறைந்தபட்சம், ரூ 5,200-20,200 + நிலை சம்பளம் 2,400/- ஐ மிகாத மாநில அரசின் கீழ்வரும் பதவிக்குரிய நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்கும் ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படுகின்றன.

பதவியின் சம்பள விகிதத்தில் திருத்திய தொடக்க சம்பளம் ரூ 4,800-10,000+நிலை சம்பளம் ரூ.1,400/-க்கு அதிகமாக, ஆனால் ரூ. 9300 - 34,800+ நிலை சம்பளம் ரூ.4,400/-க்குக் குறைவாகக் கொண்ட C பிரிவின் கீழ் வரும் பதவிகளின் மொத்தக் காலியிடங்களில் 5 சதவீதம் முன்னாள் இராணுவத்தினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

ஆதிதிராவிடர் வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)ஆகியோரின் பட்டியல்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**குறிப்புகள் :-**

(i) தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து, இணைப்பில் காணும் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே அவ்விண்ணப்பதாரர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) என்று கருதப்படுவர். பிறமாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும், ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)இனத்தைச் சேர்ந்தவர்களாக் கருதப்படமாட்டார்கள்.

(ii) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்து மதத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள் 24-2-1986 முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாகக் கருதப்படுவார்கள்.

(iii) ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் கிறித்துவ மதத்திற்கு மாறிய பிறகு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படமாட்டார். அவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக மட்டுமே கருதப்படுவார்.

(iv) "அருந்ததியர்" என்பது : அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மாதிகா, பகடை, தோட்டி, ஆதிஆந்திரர் ஆகிய இனத்தைக் குறிக்கும்.

**7. குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி**

குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி என்று எங்கெங்கு குறிப்பிடப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் என்று பொருள்படும்.

(1) இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்லூரிப் படிப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதி பெறும் வகையில் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி அல்லது

(2) இம்மாநிலத்தில் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி.

**விளக்கம்:- 1.** ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு எழுதியிருந்து, ஒவ்வொரு பாடத்திலும் ஒரு தடவையிலோ அல்லது பகுதிமுறையிலோ 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவர் பள்ளி இறுதித் தேர்வில் தேறியவராகக் கருதப்படுவார்.

**விளக்கம்:- 2.** ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெறத் தவறி, தோல்வியுற்ற அந்தப் பாடம் அல்லது பாடங்களில் 10 ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு எழுதி, 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார்.

**விளக்கம்:- 3.** ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் விருப்பப்பாடம் எடுத்துப் படித்து, அந்த விருப்பப்பாடத்தில் தோல்வியடைந்திருந்து, விருப்பப்பாடத்தைத் தவிர மற்ற அனைத்துப் பாடங்களிலும் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

**விளக்கம் :- 4.** ஒரு நபர், தமிழ்நாடு திறந்த வெளிப் பள்ளிக் குழுமத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

**8. கூடுதல் தகுதிகள் / முன்னுரிமை**

மற்ற தகுதிகள் இணையாக இருக்குமானால், தேசிய மாணவர் படை (என்.சி.சி)யில் பெற்ற பயிற்சியும், அனுபவமும் மற்றும் பாதுகாப்புப் படை (Defence Forces)-ல் ஆற்றிய பணியும் கூடுதல் தகுதியாகக் கருதப்படும். குடியரசுத் தலைவரின் விருது (Award) பெற்ற தலைசிறந்த சாரணருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**9. இணையான கல்வித் தகுதி**

பல்கலைக்கழக மானியக் குழுவினால் மானியம் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தாலோ, கல்வி நிறுவனத்தாலோ நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு நிகரான ஒரு பட்டம் வழங்கப்பட்டிருந்தால், அக்கல்வித் தகுதி பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரை தலைமையாகக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனையின்படி, குறிப்பிட்ட கல்வித் தகுதிக்குச் சமமானதாகவோ அல்லது அதைவிட உயர்வானதாகவோ மாநில அரசால் அறிவிக்கப்பட்ட கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் பெற்றுள்ள தகுதிகள் நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளவையாக இல்லாவிட்டாலும் அவற்றிற்கு இணையானதாக அவை இருப்பதாக அவர் உரிமை கோரினால், அதனை நிரூபிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரரையே சாரும். அத்தகைய நிகழ்வுகளில் இணையான கல்வித்தகுதிதான் என்பதற்கான சான்றுக் கடிதத்தினை அவ்விண்ணப்தாரர்கள் பயின்ற பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றிருக்கவேண்டும். இருந்த போதிலும், இக்கல்வித் தகுதி அரசாணை எண் 441 நிர்வாக மற்றும் சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 20.12.1993-ன்படி அமைக்கப்பட்ட இணைக் கல்வித்தகுதி நிர்ணய பரிசீலிப்புக் குழுவினால்எடுக்கப்படும் முடிவிற்கும், அரசு எடுக்கும் முடிவிற்கும் கட்டுப்பட்டதாகும். இணையான கல்வித் தகுதிக்கான நகல் சான்று விண்ணப்படிவத்துடன் இணைக்கப்படவேண்டும். மூலச் சான்று வாய்மொழித் தேர்வின் பொழுதோ, அல்லது தேர்வாணையத்தால் கேட்கப்படும் பொழுதோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத்தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**10. தமிழில் தகுதி**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும், பதவிக்குரிய தேர்வாணையத்தின் அறிவிக்கை நாளன்று, போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும்.

**விளக்கம் :-** கீழ்க்காணும் தகுதியைப் பெற்றிருந்தால் ஒருவர் போதிய தமிழறிவு பெற்றவராகக் கருதப்படுவார்:-

ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியும் அதற்கு மேலும் இருந்தால், பள்ளியிறுதிப் பொதுத் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பள்ளியிறுதிப் பொதுத் தேர்வைத் தமிழில் எழுதித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:-

போதுமான தமிழறிவு இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் தேர்வு பெற்றுப் பணியில் நியமிக்கப்பட்டால், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழில் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

**11. தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை**

விண்ணப்பதரர்களுக்கான தகவல் சிற்றேடு பிற்சேர்க்கை-III-ல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 284 தலைமை மற்றும் துணைஅஞ்சலகங்களில் ஏதேனும் ஒன்றின் மூலமாக மட்டுமே தேர்வுக்கட்டணம் செலுத்தப்படவேண்டும். தேர்வுக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான அஞ்சலகப் பற்றுச்சீட்டு, விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்படவேண்டும்.

சாதாரணமாக, விண்ணப்பதாரரால் செலுத்தப்படும் தேர்வுக்கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது.

**12. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து சலுகை**

| வகை | சலுகை | நிபந்தனை |
|---|---|---|
| ஆதி திராவிடர்/அருந்ததியர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ---- |
| பழங்குடியினர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ---- |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை | பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும் |
| இஸ்லாமியர் அல்லாதபிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை | பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும் |
| முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ---- |
| உடல் ஊனமுற்றோர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ---- |
| ஆதரவற்ற விதவை | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ---- |

**குறிப்புகள் :-1**

(அ) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு என்ன உடல் ஊனம் என்பதனைக் குறிப்பிட்டு, அத்தகைய உடல் ஊனம் அவருடைய பணிகளைத் திறம்படச் செய்வதற்குத் தடையாக இருக்காது என்று மருத்துவ அதிகாரிகளால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஆதரவற்ற விதவைகளைப் பொறுத்தமட்டில், ஆதரவற்ற விதவை என்பதற்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**குறிப்புகள்.2 :**

(i) விண்ணப்பம் அனுப்பிய பிறகு நேர்முகத் தேர்வு உட்பட போட்டித் தேர்வுக்கு வரத் தவறினாலும் அளிக்கப்பட்டுள்ள கட்டணச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டதாகவே கருதப்படும்.

(ii) **அளிக்கப்பட்டுள்ள மூன்று/இரண்டு முறைக் கட்டணச் சலுகை ஒவ்வொரு பதவிக்கும் இல்லை. மொத்தமாக ஏதாவது மூன்று/இரண்டு விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும்.** எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டாலும் அனுமதிக்கப்பட்டாலும், திரும்பப் பெறப்பட்டாலும் அதில் கோரப்படும் கட்டணச் சலுகை, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(iii) ஏற்கனவே பெற்ற கட்டணச் சலுகையை மறைத்து பொய்யாகக் கட்டணச் சலுகை கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தால் இனி நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து தள்ளிவைக்கப்படுவார்கள்.

(iv) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) புகுமுக வகுப்புத் தேர்வில் அல்லது பட்டப் படிப்பில் முதல் அல்லது இரண்டாம் ஆண்டு முடிவில் நடைபெறும் தேர்வுகளில் வெற்றி பெற்றிருந்தாலும் அல்லது பட்டப்படிப்புத் தேர்வில் ஒரு சில பாகங்களில் மட்டுமே தேர்வு பெற்றிருந்தாலும் வரையறுக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படமாட்டார்கள்.

**13. முன்னாள் இராணுவத்தினருக்கான கல்வித் தகுதி/ வயது வரம்பு சலுகை :**

படைக்கலைப்பினால் முப்படைகளிலிருந்து (தரைப்படை, கடற்படை, விமானப்படை) விடுவிக்கப்பட்டவர்கள்.

(1) தெரிவு நடத்தப்பெறும் ஆண்டின் ஜூலை முதல் நாள் அன்று ஐம்பத்து மூன்று வயதிற்குக் குறைந்த ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், இஸ்லாமியர்அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) ஆகியோர்.

**ஏனையோர் நாற்பத்தெட்டுவயதிற்குக் குறைந்தவர்கள்**

(2) மேற்காணபவர்கள் விண்ணப்பதாரர்களுக்கான அறிவிக்கை/ விளம்பரத்தில் அறிவிக்கப்பட்டுள்ள வயது வரம்பு உட்பட அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் யாவும் முழுமையாகப் பெற்றிராவிட்டாலும் விண்ணப்பிக்கலாம்.

(3) அவர்களுடைய விண்ணப்பங்கள் அவரவருக்குள்ள தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும். மேலும், வயது வரம்பு உட்பட தகுதிகள் எவையேனும் தளர்த்த வேண்டுமா என்பது குறித்து அவர் தெரிந்தெடுக்கப்படுவாரானால் பரிசீலிக்கப்படும்.

4) **முப்படைப் பணி விடுவிப்புப் பெறும் இறுதியாண்டில், அதாவது பணி விடுவிப்பு பெறுவதற்கு ஓராண்டு முன்னதாகவே, குடிமைப்பணித் தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வு எழுத அனுமதித்து, தேர்வில் தேர்ச்சி பெறும் நிலையில் ஏனைய தகுதிகள் இருப்பின், நடுவண் அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள ...திமுறைகளைப் பின்பற்றி முன்னால் படை ...ர்களுக்கான சலுகைகளைப் பெறலாம்.**

... "முன்னாள் இராணுவத்தினர்" என்பவர்,

...தியப் பாதுகாப்புப் படைகளில் எந்தவொரு பதவி ...லையிலேனும் (Rank) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) ...ிபுரிந்து, தவறான நடத்தை அல்லது திறமையின்மை ...ணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் ...ய்யப்பட்டவராக அல்லாமல் 30.6.1968 அன்றோ அதற்கு ...ாகவோ பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

...தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் ...nk) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் ...ள்ளப்பட்டபின் (after attestation) தொடர்ந்து ஆறுமாத ...த்திற்கும் குறையாத பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது ...மையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது ...ிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமல் 1.7.1968 முதல் 30.6. ... வரையிலான காலத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

...தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் ...nk) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் கொள்ளப்பட்டபின் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும் குறையாத பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும் 1.7.1979 முதல் 30.6.1987 வரையிலான காலத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர் மற்றும் ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் பணிபுரிந்து சொந்த விருப்பப் பேரில் விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

(ஈ) இந்தியப் பாதுகாப்புப் படைகளில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும், 1.7.1987 அன்றோ அதற்குப் பிறகோ ஏதேனும் ஒருவகை ஓய்வூதியத்துடன் அல்லது குறிப்பிட்ட பணியை நிறைவு செய்து பணிக்கொடையுடன் ஓய்வு பெற்றவர் அல்லது விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

உ) 15.11.1986 அன்றோ அதற்குப் பிறகோ ஓய்வு பெற்ற பிராந்திய இராணுவப் படையைச் சேர்ந்த பின்வரும் வகையினர்

1. பிராந்திய இராணுவப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டபின் (embodied) தொடர்ச்சியான பணிக்காக ஓய்வூதியம் பெற்றவர்.
2. படைப்பணியின் காரணமாக ஊனமடைந்தவர்.
3. வீர விருது பெற்றவர்.

(அல்லது)

ஊ) இராணுவ அஞ்சல் பிரிவினைச் சேர்ந்த பின்வரும் வகையினர் /

1. தபால் தந்தித் துறையிலிருந்து இராணுவ அஞ்சல் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் தபால் தந்தித் துறைக்குத் திரும்ப அனுப்பப்படாமல் இராணுவ அஞ்சல் பணியிலேயே 19.7.1989 அன்றோ அதற்குப் பிறகோ ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள்.
2. படைப்பணியினாலோ தன் கட்டுபாட்டிற்கு மீறிய சூழ்நிலைகளினாலோ மருத்துவ அல்லது வேறு பிற இயலாமை ஓய்வூதியத்துடன் 19.7.1989 அன்றோ அதற்குப் பிறகோ மருத்துவக் காரணத்தினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

எ) இராணுவ விதி 13 (3) III (V)-ன் கீழ் அவரது பணி இனிமேலும் தேவைப்படாத காரணத்தினால் ஜூலைத் திங்கள் 1967க்குப் பிறகு பணியிலிருந்து விலக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுபவர்.

குறிப்பு:- 2

1) படைப்பணிக்காகத் தெரிவு செய்யப்பட்டு முழுநேரப் பணி ஏற்காதவர் (Recruit), முன்னாள் படைவீரராகக் கருதப்படமாட்டார்.

(2) இராணுவ விதி 13 (3) III (V)-ன் கீழ் பணி தேவைப்படாத காரணத்தினால் 1987-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்கு முன் பணியிலிருந்து விலக்கப்பட்டவர், முன்னாள் படைவீரராகக் கருதப்படமாட்டார்

கோரிக்கைக்கு ஆதாரமாக அவரது பணி விடுவிப்புச் சான்றிதழிலிருந்து (Discharge Certificate) தகுந்த முறையில் எடுக்கப்பட்டு உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பைப் பின்வரும் படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

---

(1) பணிவேட்பாளரின் பெயர்

(2) வகித்த பதவி

(3) படையில் சேர்ந்த தேதி

(4) விடுவிக்கப்பட்ட தேதி

(5) விடுவிக்கப்பட்டதற்கான காரணங்கள்

(6) இராணுவத்தில் வேலை பார்த்த போது நடத்தையும், ஒழுக்கமும்

**14. வயது வரம்பு சலுகை மட்டும்**

**(அ) தமிழ்நாடு மாநில மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிறுவனப் பணியாளர்கள் (Census Organisation)**

(1) குறைந்த அளவு ஆறு மாதங்கள் தற்காலிகப் பணி செய்திருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள அல்லது ஆட்குறைப்பு செய்யப்பட்டுள்ள தற்காலிகமான அதிகப்படி பணியாளர்கள்.

(2) அவர்களுடைய வயதைக் கணக்கிடும்போது அவர்கள் வயதிலிருந்து

அதிக பட்சம் மூன்று ஆண்டுகால அளவைக் குறைத்துக் கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(3) இச்சலுகையைத் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம்.

(4) மத்திய அல்லது மாநில அரசில் அத்தகையோர் முறையான பணியிலிருப்பின் அவர்களுக்கு இச்சலுகை பொருந்தாது.

(5) இச்சலுகை வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிறுவனத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(6) மக்கள் தொகை கணிப்புக் கண்காணிப்பாளரிடமிருந்து (Superintendent of Census organisation) பின்வரும் படிவத்தில் சான்றினைப் பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

---

(1) பணி வேட்பாளரின் பெயர்

(2) மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிறுவனத்தில் தற்காலிகமாகப் பணியாற்றிய பதவியின் விவரம்

(3) வேலையின் விவரங்கள் தேதிகளுடன்

(4) பணி வேட்பாளரின் பணியும் நடத்தையும், மனநிறைவு அளிப்பதாக இருந்தனவா?

**(ஆ) 1963 ஜனவரி முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் தேசிய மாணவர் படையில் (National Cadet Corps) சார்நிலை அலுவலர் பயிற்றுநர்கள் (Under Officer Instructors) அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக வேலையில் அமர்த்தப்பட்டிருந்த தேசிய மாணவர் படையின் முன்னாள் பயிற்றுநர்கள்.**

(1) வயதுத் தகுதியைத் தவிர நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தால் விண்ணப்பிக்கலாம்.

(2) அவர் தேசிய மாணவர் படையில் சார்நிலை அலுவலர் பயிற்றுநர்களாக அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக எவ்வளவு காலம் பணிபுரிந்துள்ளார்களோ அக்கால அளவை அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

(3) இத்தகைய விண்ணப்பதாரர்கள் மற்றபடி தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டால், அவர்களுக்காக வயது சம்பந்தப்பட்ட விதி அரசால் தளர்த்தப்படும்.

**(இ) தகுதி பெறாத பகுதி நேர இந்தி மொழிப் புலவர்களும் பிறமொழிப் புலவர்களும்**

(1) மற்ற பதவிகளில் நியமிக்கப்படுவதற்கு தெரிந்தெடுக்கப்படும் ஆண்டின் ஜூலை முதல்நாளில் நாற்பது வயதிற்குக் குறைந்தவர்களாக இருந்து வயதுத் தகுதி தவிர நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் அவர்கள் பெற்றிருந்தால், அவர்களும் விண்ணப்பிக்கலாம்.

(2) இத்தகைய விண்ணப்பதாரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால் அவர்களுக்காக வயது சம்பந்தப்பட்ட விதி, அரசால் தளர்த்தப்படும்.

இத்தகைய விண்ணப்பதாரர்கள் தகுதி பெறாத பகுதி நேர இந்தி அல்லது பிறமொழிப் புலவர்கள் என்றும் அவர்கள் இருமொழித் திட்டம் கொண்டுவரப்பட்டதன் விளைவாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் என்றும் காட்டுவதற்கு, அரசாங்க “அ” (A) மற்றும் “ஆ” (B) பிரிவு பள்ளிகளிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட புலவர்களைப் பொறுத்தவரையில் தலைமைக் கல்வி அலுவலரிடமிருந்தும், அரசின் மானிய உதவி பெறும் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த பள்ளிகளிலிருந்து ஆட்குறைப்புச் செய்யப்பட்ட புலவர்களைப் பொறுத்தவரையில் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்தும் ஒரு சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**(ஈ) 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் அன்று நுகர்பொருள் வழங்கு துறையில் ஆட்குறைப்புப் பணியாளர்கள்**

(1) குறைந்தஅளவு இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

(2) அவர்களுடைய வயதைக் கணக்கிடும்போது அந்தத்துறையில் அவர்கள் ஆற்றிய பணியின் கால அளவையும் அந்தத் துறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு அரசின் வேறு துறை எதிலும் ஆற்றிய பணியின் கால அளவையும் (அது தொடர்ச்சியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) அவற்றுடன் மேலும் ஒரு மூன்று ஆண்டு கால அளவையும் சேர்த்து அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**(உ) பிராந்திய இராணுவப் படையினர்**

(1) நிரந்தரப் பணியாளராகப் பணி செய்திருந்தவர் அல்லது பிராந்திய இராணுவப் படை விதி 33-ன் படி பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 6 மாதங்களுக்குக் குறையாமல் தொடர்ந்து பணியிலிருந்தவர்.

(2) அவர்கள் பிராந்திய இராணுவப் படையில் பணிபுரிந்த காலம் அவர்களுடைய வயதிலிருந்து குறைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வாறு குறைத்த பின்னர் அவர்களுடைய வயது அந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வயது வரம்பைவிட மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் இருந்தால் அவர்கள் அந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயதைப் பொறுத்தவரை தகுதியுடையவராகக் கருதப்படுவர். இதற்காக அவர்கள் பிராந்திய படையில் பணிபுரிந்த, பணி இடைமுறிவுக் காலங்கள் உட்பட மொத்தப் பணிக்காலமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(3) பிராந்திய தரைப்படையில் உள்ள தகுதியுள்ள ஓர் அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் சான்றிதழைப் பெற்று அனுப்ப வேண்டும்.

(1) விண்ணப்பதாரரின் பெயர்

(2) பிராந்திய இராணுவப் படையில் வகித்த பதவி

(3) பிராந்திய இராணுவப்படைப் பிரிவில் நிரந்தரப் பணியாளராகப் பணியாற்றி -யுள்ளாரா? அல்லது பிராந்திய இராணுவ விதிகள் 33-ன் கீழ் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டாரா?

(4) பிராந்திய இராணுவப்படைப் முதல் வரைபிரிவில் பணிபுரிந்த காலம், சரியான தேதிகளுடன்

(5) பிராந்திய இராணுவப்படைப் பிரிவில் இருக்கும்போது நடத்தையும் ஒழுக்கமும்

(6) பணிக்காலத்தில் ஏதாவது தண்டனை அளிக்கப் பட்டுள்ளதா? ஆம் எனில் விவரங்கள் தரவும்.

**(ஊ) உடல் ஊனமுற்றோர்** ..............முதல் ..........வரை

(1) நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்.

(2) தெரிந்தெடுக்கப்பட்ட பதவிக்கு மற்றபடி தகுதியானவர்களாயிருப்பதுடன், இந்திய அரசு நிர்ணயித்துள்ள வரையரைகளின் படியும் 6.11.1989 நாளிடப்பட்ட **B.C. W.N.M.P. and S.W**. துறையின் அரசாணை (பலவகை) எண்.927-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடியும் சம்பந்தப்பட்ட துறையில் பணியாற்றும் ஒரு மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்ற ஒரு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். அச்சான்றிதழில் உடல் ஊனத்தின் இயல்பையும் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இயலாமையின் அளவையும் குறிப்பிடுவதோடு அவர் தெரிந்தெடுக்கப்படும் பதவியில் திறம்படப் பணியாற்றுவதற்கு அவரது உடல் ஊனம் எவ்வகையிலும் தடையாக இருக்காது என்று அந்த மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

**குறிப்புகள் :-**

(1) உடல் ஊனமுற்றோருக்கு உரியனவாகத் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதி முறைகளில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டாலொழிய, அவையும் தேர்வாணையத்தின் அறிவிக்கையில், / விளம்பரத்தில் அறிவிக்கப்படும் ஏதேனும் பிற சலுகைகளும் அவர்களது உடல் ஊனத்தின் அளவு 40 சதவீதம் அல்லது அதற்கு மேலாக இருந்தால் மட்டுமே, அவர்களுக்குப் பொருந்தும்.

(2) மருத்துவ அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ் உடல் ஊனத்தை வகைப்படுத்தும் தகுதிக் கூறுகளுக்கு இணங்க அமையவில்லை என்ற சந்தேகம் ஏற்படின் அச்சான்றிதழ் உரிய மருத்துவ குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

**(எ) பிணைத் தொழிலாளிகள்**

(1) ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவுகளின் கீழ் வரும் பதவிகளுக்கு, (அதாவது பதவியின் திருத்திய சம்பள விகிதத்தில் ஆரம்ப சம்பளம் ரூ.9300 - 34,800 + நிலை சம்பளம் 4400/-க்கும் குறைவாகக் கொண்டவை).

(2) விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளியாக அல்லது அப்படிப்பட்டவர்களின் புதல்வராக அல்லது திருமணமாகாத புதல்வியாக இருப்பின் வயது வரம்பில் சலுகைகள் பெறத் தகுதி உடையவராவர்.

(3) அவர்கள் பணி நியமனம் செய்யப்படும் வருடத்தில் ஜூலை மாதம் முதல் தேதி அன்று 40 வயது நிரம்பாதவராக இருக்க வேண்டும்.

(4) இவர்கள் 1976-ம் ஆண்டு, பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தின் வழிவகைப்படி விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளிகள் என்பதற்கான சான்றிதழைக் கீழ்க்கண்ட படிவத்தில் சாதிச் சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்று அனுப்ப வேண்டும்.

சான்றிதழ்

______________________ மாவட்டம் ________________________ வட்டம்

____________________________________ கிராமத்தில் வசித்து வரும் திரு ____________________________________ என்பவருடைய மகன்/திருமணமாகாத மகள் திரு/செல்வி. ____________________________________ 1976-ம் ஆண்டு, பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்ட வழிவகைப்படி ________________________ அன்று விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி/ இவருடைய பெற்றோர் விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி என்று சான்று அளிக்கிறேன்.

**(ஏ) விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலுள்ள தற்காலிகப் பணியாளர்கள்**

(1) தெரிவு செய்யப்படும் ஆண்டில் ஜீலை திங்கள் முதல் நாளன்று 40 வயது முடிந்திருக்கக்கூடாது.

(2) தமிழ்நாடு அரசின் தற்காலிகப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களும் அப்பணியில் தொடர்ந்து தேர்வாணையத்தின் அறிவிக்கை நாள் வரையில் தற்காலிகமாகப் பணியாற்றிய பணிக்காலத்தை (தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியின்றியோ) தம்முடைய வயதிலிருந்து கழித்துக் கணக்கிட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**குறிப்பு**

மாநில அரசில் பணியாற்றி, ஆட்குறைப்பு காரணமாகவோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை நீங்கலாக வேறு யாதொரு காரணத்திற்காகவோ பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மட்டுமே “பணிவிடுவிப்பு செய்யப்பட்ட மாநில அரசு அலுவலர்களாகக் கருதப்படுவர்”.

**15. சான்றுகள் தாக்கல் செய்தல் :-**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் அ அல்லது ஆ நிலை அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்களை அனுப்ப வேண்டும்.

எனினும் விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களுக்குச் சான்றாக இருக்கும் மூலச்சான்றுகளை நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் பொழுதோ அல்லது தேர்வாணையம் கேட்கும் தருணத்திலோ தாக்கல் செய்தல் வேண்டும்.

முந்தைய சந்தர்ப்பம் ஒன்றில் தேர்வாணையத்திற்கு விண்ணப்பித்திருந்த ஒரு விண்ணப்பதாரர் கோரப்படும் ஆவணங்களை ஏற்கனவே அனுப்பி வைத்துத் திரும்பப் பெற்றிருப்பினும், அவற்றை மறுபடியும் கோரும் பொழுது தாக்கல் செய்ய வேண்டும்.

**(அ) பிறந்த தேதிக்கான சான்று**

(i) உயர்நிலைப் பள்ளியைவிட்டுச் சென்றதற்கான சான்றிதழ் (S.S.L.C.) அல்லது

(ii) பல்கலைக் கழகத்தின் அல்லது கல்லூரியின் அல்லது பள்ளியின் ஆவணங்களில் கண்டுள்ளவற்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி அல்லது பள்ளி அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட பிறந்த தேதியைக் காட்டுகிற ஒரு சான்றிதழ் (ஞானஸ்நான (Baptism) சான்றிதழ்) அல்லது பிறப்புப் பதிவேட்டின் எடு குறிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) அல்லது

(iii) மாநில அரசின் கீழ் முறையான பணியில் உள்ள விண்ணப்பதாரர்களின் பணிப் பதிவேட்டிலிருந்து அவர்களுடைய பிறந்த தேதிக்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட எடுகுறிப்பு.

**(ஆ) ஒழுக்கம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழ்கள்/**

(1) விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த அல்லது படித்துக் கொண்டிருக்கின்ற (தனிப்பயிற்சிக் கல்லூரி (Tutorial College) அல்லது பள்ளி அல்லது தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சி நிலையம் தவிர) கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.

(2) விண்ணப்பதாரரை நேர்முகமாகத் தெரிந்துள்ள ஒரு அ அல்லது ஆ நிலை அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ். இது செய்தித் தாள்களில் நியமனத்திற்கான விளம்பரம் செய்யப்பட்ட மாதத்தின் முதல் தேதிக்கு முன்னதாக இருக்கக் கூடாது.

இச்சான்றிதழ் விண்ணப்பதாரரைப் பற்றிய நேர்முகமான அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஓர் உறவினரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் கூடாது.

குறிப்புகள்:-

(i) விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த அல்லது படித்துக் கொண்டிருக்கின்ற கல்வி நிலையத்தில் அவர் படித்த கால அளவு ஒரு கல்வியாண்டிற்குக் குறைவாக இருந்தால் ஒரு கல்வியாண்டிற்குக் குறையாமல் அவர் கடைசியாகப் படித்த கல்வி நிலையத் தலைவரிடமிருந்து மற்றொரு சான்றிதழையும் பெற்று அனுப்ப வேண்டும்.

(ii) ஒரே நபரிடமிருந்து இரண்டு சான்றிதழ்கள் பெறுதல் கூடாது.

(இ) நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளுக்கு (தமிழில் பெற்றிருக்க வேண்டிய தகுதி உட்பட) சான்றாக இருக்கும் ஆவணங்கள்.

குறிப்பு:-

(1) பட்டம் (Degree) அல்லது பட்டத்தின் தற்காலிகச் சான்றிதழின் (Provisional Certificate) நகல்கள் மட்டுமே கல்வித்தகுதிக்குரிய சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும். மதிப்பெண்கள் பட்டியல் அல்லது மதிப்பெண் நிலைச் சான்றிதழ் (Grade Certificate) ஆகியவற்றின் நகல்கள் போதுமான ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனினும் பட்டச் சான்றிதழ் தொலைந்து போயிருந்தாலோ அல்லது ஏதாவது காரணத்தால் உடனடியாக கிடைக்கவில்லையென்றாலோ பட்டமளிப்பு விழாவிற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட எடு குறிப்பின் நகல்கள் கல்வித் தகுதிக்குரிய சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும்..

(2) போதிய தமிழறிவு பெற்றிருப்பதாகக் கோரும் விண்ணப்பதாரர் அவருடைய தாய்மொழி தமிழாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர் பள்ளியிறுதி பொதுத் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்து படித்திருந்தாலோ அல்லது மொழி அல்லாத மற்ற எல்லாப் பாடங்களையும் தமிழில் படித்திருந்தாலோ அல்லது இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத் தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ அதன் சான்றிதழை அனுப்ப வேண்டும்.

**(ஈ) நடைமுறை அனுபவம் / மற்ற அனுபவம் / வழக்குரைதலில் அனுபவம் (Bar Experience)**

தனியாகக் கூறப்பட்ட இனங்களைத் தவிர, அறிவிக்கப்பட்ட பதவிக்கான கல்வித் தகுதி/தொழில் நுட்பத் தகுதியுடன் நடைமுறை அனுபவம்/ மற்ற அனுபவங்கள் ஏதாவது தேவையென அறிவிக்கப்பட்டிருந்தால் அப்பதவிக்கான கல்வித் தகுதி/ தொழில் நுட்பத் தகுதிகளைப் பெற்ற பிறகே அவ்வனுபவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

நடைமுறை அனுபவத்திற்கான சான்றிதழ் ஏதும் தேவை என அறிவிக்கப்பட்டிருப்பின் அச்சான்றிதழ் தேர்வாணைய அறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட விவரங்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

வழக்குரைதலில் அனுபவத்திற்கான சான்றிதழும் தேர்வாணைய அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

**(உ) பதிவுச் சான்றிதழ்கள்**

வழக்குரைஞர் மன்றம் அல்லது மத்திய இந்திய மருத்துவ மன்றம், சென்னை மற்றும் /அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவ மன்றம், சென்னை/ தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம்/ தமிழ்நாடு இந்திய மருத்துவ மன்றம், தமிழ்நாடு மருத்துவ மன்றம், தமிழ்நாடு ஹோமியோபதி மன்றம் அல்லது தமிழ்நாடு கால்நடை மருத்துவ மன்றம் போன்றவற்றில் பதிவு செய்திருப்பது, எந்தப் பணிகளில் பணியாற்றுவதற்கு அவசியம் என்று விதிமுறைகள் உள்ளனவோ அந்தப் பணிகளுக்கான தேர்வாணையத்தின் அறிவிக்கைத் தேதிக்கு முன்னரே அவ்வாறு பதிவு செய்யப்பட்டு, பதிவு சான்றிதழின் நகலை அவர் தகுதிக்கு ஆதாரமாக அனுப்பப்படும் மற்ற சான்றிதழ்களோடு அனுப்ப வேண்டும். மூலச்சான்றினை நேர்காணல் தேர்வின்பொழுது மற்றசான்றிதழ்களோடு அளிக்க வேண்டும்.

**(ஊ) சாதிச் சான்றிதழ்**

ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடா அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இஸலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) இனத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் 02.05.1988-ஆம் நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை எண் 781-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழை அனுப்ப வேண்டும்.

| வரிசை எண். | சாதியின் பெயர் | சாதி சான்றிதழ் வழங்க தகுதியுடைய அலுவலர் |
|---|---|---|
| 1 | பழங்குடியினர் | வருவாய்க் கோட்ட அலுவலர்/மாவட்ட உதவி ஆட்சியர் /மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)/ மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர். |
| 2. | ஆதிதிராவிடர் வகுப்பினர்/ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | வட்டாட்சியர் |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட் வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத்துணை வட்டாட்சியர் / கூடுதல் தலைமையிடத்துத்துணை வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர் |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜ கம்பளம், கொல்லவர், சில்லவர் தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) | தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் |

விண்ணப்பதாரரின் நிரந்தரக் குடியிருப்பு எல்லைக்குட்பட்டுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியால் நேரில் கேட்டறிந்த பிறகும் முறையாக ஆய்வு செய்த பிறகும் சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும். 02.05.88 ஆம் நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை எண் 781-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்களும் உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச் சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்பட்டு தாக்கல்

செய்யப்பட்ட சான்றிதழில் குறிக்கப்பட்டுள்ள சாதி, இந்த விதிமுறைகளின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால், அவ்விண்ணப்பதாரர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இந்நிலையில் அவர்கள் ஏனையோர்கள் (Others) என்ற பிரிவின் கீழ் மட்டுமே கருதப்படுவார்கள். மேலும் ஏனையோர்கள் என்ற பிரிவின்கீழ் அவர்கள் கருதப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றால் அவர்களுடைய விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

தடையின்மைச் சான்றிதழ்

இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியிலுள்ளவர்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஓரளவு அரசு சார்புள்ள நிறுவனங்களில் வேலையில் நிரந்தரப் பணியிலாவது அல்லது தற்காலிகப்பணியிலாவது உள்ளவர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை தாம் வகித்து வரும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குத் தகுதி பெற்ற அதிகாரியின் மூலமாகவோ அல்லது துறைத் தலைவரின் வாயிலாகவோ அனுப்பத்தேவையில்லை. மாறாக தமது துறைத்தலைவருக்கு தாம் தேர்வாணையத்தின் எந்த தெரிவிற்கு விண்ணப்பிக்கிறார் என்பதனை எழுத்து மூலம் தெரிவித்து விண்ணப்பத்தினை நேரடியாக தேர்வாணையத்திற்கு அனுப்பலாம்.

இவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள படிவத்தில் தமது பதவிக்கு அடுத்த உயர்நிலைக்குக் குறையாத மேலதிகாரியிடமிருந்து "விண்ணப்பத்தை ஏற்கத் தடையில்லை" என்ற சான்றிதழினை கீழ்க்கண்டவாறு அனுப்ப வேண்டும்.

(1) எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வும் சேர்ந்த தெரிவிற்கு விண்ணப்பிப்போர் நேர்முகத் தேர்வின்போதும்

(2) எழுத்துத் தேர்வு மட்டுமே உள்ள தெரிவிற்கு மூலச்சான்றுகளை தேர்வாணையத்தின் சரிபார்த்தலுக்காக அனுப்பும் போதும்.

---

**துறைத்தலைவர் அல்லது அலுவலகத் தலைவர் அல்லது வேலைக்கு அமர்த்தியவர் அளிக்கும் சான்றிதழ்.**

1. விண்ணப்பதாரர் பெயர்

2. வகிக்கும் பதவியின் பெயர்

3. விண்ணப்பதாரர் அவசர விதிகளின்கீழ் தற்காலிகமான பணியாளரா?அல்லது விண்ணப்பதாரர் மாநில அல்லது சார் நிலைப் பணிகளில் தகுதி காண் பருவத்தினரா? அல்லது தகுதிகாண்பருவம் முடிந்துஒப்பளிக்கப் பட்டவரா ?அல்லது நிலை உறுப்பினரா?

4. பணியாற்றிய காலம் முதல் (நாள்) வரை (நாள்)

மேற்குறிப்பு எண். நாள்

1. .............என்ற பதவிக்கான இவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் எனக்கு மறுப்பில்லை.

2. திரு/திருமதி/செல்வி............................................... க்கு கீழ்க்கண்ட தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன/தண்டனை ஏதும் விதிக்கப்பட்டிருக்கவில்லை என்று சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இடம் : | அலுவலக | கையொப்பம் |
| நாள்: | முத்திரை | பதவியின்பெயர். |

---

குறிப்புகள்:-

(1) தேர்வாணையத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிய பிறகும் நேர்காணல் தேர்விற்கு அழைப்பதற்கான/ சரிபார்த்தலுக்காக மூலச்சான்றுகளை அனுப்புவதற்கான தகவல் பெறப்பட்டதற்கு முன்புமான இடைப்பட்ட காலத்திற்குள் பணி நியமனம் பெற்ற விண்ணப்பதாரர்களும் தடையின்மைச் சான்றிதழ்களை அனுப்புதல் வேண்டும்.

(2) தடையின்மைச் சான்றிதழை அனுப்பிய பிறகும் பணியமர்த்தப்பட்ட நாளிற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பதாரர்கள் மீது குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ அவ்விவரங்களை விண்ணப்பதாரர்கள் தமது பதிவு எண்ணுடன் உடனடியாக தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

**16. நிழற்படத்தின் நகல்கள்**

விண்ணப்பதாரர் அண்மையில் எடுக்கப்பட்ட அவருடைய கடவுச்சீட்டு அளவு நிழற்படத்தினை விண்ணப்பப் படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்ட நிழற்படத்தினைப் போன்றே மற்றொரு நிழற்படத்தினை நேர்காணல் தேர்வின் போதோ அல்லது கேட்கப்படும்போதோ கொடுக்கவேண்டும்.

குறிப்பு:-

நிழற்படங்கள் விண்ணப்ப தேதிக்கு முன் ஒரு மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கீழ்காணும் நிழற்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(1) இவ்வலுவலக முத்திரை அல்லது வேறு அலுவலக முத்திரை பதிக்கப்பட்ட நிழற்படங்கள்.

(2) கிழிந்து வீணான நிழற்படங்கள்.

(3) வேறு விண்ணப்பத்திற்காக ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட நிழற்படங்கள்.

(4) வெவ்வேறு சமயங்களில் எடுக்கப்பட்ட நிழற்படங்களின் நகல்கள்.

(5) நிழற்பட அச்சுக்கட்டைகள் (Blocks) அல்லது அச்சுப்பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்கள்.

(6) நிழற்படத்தின் நிழற்படி நகல்கள் (Photostat Xerox copies).

**17. தொடக்க ஊதியம் / பயணப்படி முதலியவை**

நேரடி நியமனத்தின் மூலம் மற்றொரு பணிக்கு நியமிக்கப்படுவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்கனவே (மாநில அல்லது மத்திய) அரசுப்பணி எதனிலும் பணியாற்றுபவராக இருப்பின் முந்தைய பணியின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளம், பயணப்படி முதலிய எந்தச் சலுகைகளுக்கும் உரிமையற்றவராவார். தமிழ்நாடு அரசு அல்லாத பிற அரசுப் பணியில் உள்ள ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவாரானால், அந்த அரசின் கீழமைந்த முந்தைய பணியின் அடிப்படையில், விடுப்பு மற்றும் இடமாற்ற கால ஊதியம் முதலியவற்றிற்கு தமிழ்நாடு அரசின் கீழ் சலுகைகளுக்கு உரிமையற்றவராவார்.

பணிக்கான விளம்பரம் செய்யப்பட்ட காலத்தில் குறிப்பிடப்பட்ட சம்பள விகிதம், நியமனம் பெறுங்காலத்தில் உள்ள சம்பள விகிதத்திற்கு மாறுபட்டு இருக்குமானால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அவர் நியமன கால சம்பள விகிதமே பெறுவார். பதவிக்கான சம்பளம் அவ்வப்போது செய்யப்படும் மாறுதலுக்குட்பட்டதாகும்.

**18. தகுதிகாண் பருவகாலம் / பயிற்சி**

ஒரு பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகாண் பருவம் மற்றும் பயிற்சிகளை முடிப்பதுடன் குறிப்பிட்டுள்ள தேர்வுகளிலும் தேர்ச்சி பெறவேண்டும். அந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெறத் தவறினால் அரசு வரையறுக்கும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும்.

நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்திற்கு முன் எக்காலத்திலும், பணிக்கென நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகாண் பருவகாலம் இறுதி செய்யப்பட்டு, பணியிலிருந்தும் அவர் நீக்கப்படலாம். பணிக்கான தகுதிகாண் பருவ காலத்திற்குள், தகுதிகாண் பருவத்தினருக்கென ஏதேனும் தேர்வு விதிக்கப்பட்டிருந்து அத்தேர்வில் தகுதிகாண் பருவத்தினர் தேர்ச்சியடையவில்லை என்றாலும், அல்லது மேற்குறிப்பிட்ட தகுதிகாண் பருவ முடிவில் அவர் பணிக்குப் பொருத்தமற்றவர் என்று கருதப்பட்டாலும் பணியிலிருந்து அவர் விலக்கப்படலாம்.

**19. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்துடனான தகவல் அளிப்பு**

(1) தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டிய தகவல் எதுவும் எழுத்துமூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

பதில் ஏதும் தேவைப்பட்டால், போதிய அஞ்சல் வில்லையுடன் கூடிய பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரியிட்ட உறையும், அதனுடன் அனுப்பப்பட வேண்டும்.

தெரிந்தெடுக்கப்படாமைக்கான காரணங்களைக் கேட்டும் வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரியும் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் முறையீடுகளை மட்டுமே தேர்வாணையம் பெற்றுக் கொள்ளும். ஒரு வழக்கறிஞர் அல்லது பிரதிநிதி பெயர்களில் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

எழுத்துத் தேர்வில் தோல்வியடைந்ததற்கு அல்லது எழுத்துத் தேர்வு அல்லது நேர்முகத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்குக்

காரணங்கள் கேட்டு அல்லது அவர்களுடைய விடைத்தாள்களை மறு மதிப்பீடு செய்யும்படி கேட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

(6) தேர்வாணையத்தால் நேரடி நியமனத்திற்காக நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளில் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள், தெரிவுகள் முடிவுற்ற பின்னர் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (Website: www.tnpsc.gov.in) வெளியிடப்படுகின்றன.

(7) தேர்வாணைய அலுவலகத்தினின்று நேரிடையாக மதிப்பெண்களை அறிய விரும்பும் விண்ணப்பதாரர்கள், அதற்கான வேண்டுகோளுடன் ரூ.10/- மதிப்புள்ள இந்திய அஞ்சல் ஆணையினையோ அல்லது குறுக்குக் கோடிட்ட கேட்பு வரைவோலையினையோ இணைத்து அனுப்ப வேண்டும். இது, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு செலுத்தத்தக்கதாக இருக்க வேண்டும்.

### 20. தகுதியின்மை/விலக்கிவைத்தல்

#### தகுதியின்மை

(i) தேர்வாணையத்தின் தலைவரிம் அல்லது ஓர் உறுப்பினரிடம் அவரது ஆதரவைப் பெற நேர்முகமாகவோ கடிதத்தின் மூலமாகவோ அல்லது எவரேனும் ஓர் உறவினர், நண்பர், காப்பாளர், அலுவலர் அல்லது வேறொருவர் மூலமாகவோ செல்வாக்கை செலுத்த முயற்சித்தல்,

(ii) தாராளமாக மதிப்பீடு செய்யும்படியோ, அதிக மதிப்பெண் வழங்கும்படியோ, பரிவுகாட்டும்படியோ விடைத்தாள்களில் தேர்வாளர்களுக்கு முறையீடுகள் எழுதுதல்,

(iii) வினாவிற்குத் தொடர்பில்லாதவைகளை விடைத்தாள்களில் எழுதுதல்,

(iv) முதன்மை அல்லது கூடுதல் விடைத்தாள்களில் தனது அடையாளத்தைத் தெரிவிக்கும் வகையில் ஏதேனும் குறியீடுகளை ஏற்படுத்துதல்.

ஆகியவைகளால் விண்ணப்பதாரர் அத்தேர்விற்குத் தகுதியற்றவராக ஆக்கப்படுவார்.

#### விலக்கிவைத்தல்

(அ) ஆவணங்களிலும், சான்றிதழ்களிலும் காணப்படும் ஏதேனும் திருத்தங்கள் அல்லது மோசடியாக மாறுதல் செய்தல் ஆகியவற்றிற்குக் காரணமாக உள்ள விண்ணப்பதாரர்கள், தேர்வாணையம் நடத்தும் தெரிவுகள் மற்றும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் உரிமையை இழக்க நேரிடும். மேலும், இதன் விளைவாக அரசுப்பணியில் சேர்வதற்கான உரிமையையே இழக்க நேரலாம்.

(ஆ) (i) விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய கல்வித் தகுதிகள் அல்லது பல்வேறுபட்ட பாடங்களில் பெற்ற தேர்ச்சியின் தன்மை அல்லது அவர்கள் வெவ்வேறு தகுதி நிலைகளில் பெற்ற அனுபவம் அல்லது அவர்களுடைய மதம் அல்லது சாதி முதலியன பற்றி அவர்களுடைய விண்ணப்பத்தில் தவறான தகவல்களைக் கொடுத்தல்.

(ii) கீழ்கண்ட உண்மைகளை மறைத்தல்

(அ) முன்பு தேர்வாணையத்திற்கு விண்ணப்பம் செய்தது, இலவச அனுமதி சலுகையில் தேர்வு எழுதியது மற்றும் அரசு, உள்ளாட்சி மன்றங்கள் அல்லது அரசுத் துறைக் கழகங்கள் முதலியவற்றில் பணிபுரிந்தது.

(ஆ) கைதானது / குற்றங்களுக்கான தண்டனை பெற்றது, மைய அல்லது மாநில தேர்வாணையத்தால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றதாக அறிவிக்கப்பட்டது.

(இ) ஏதேனும் கிளர்ச்சி அல்லது அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டது.

(ஈ) மாநில சட்டசபை, நாடாளுமன்றம் அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு வேட்பாளராகப் போட்டியிட்டது.

(iii) தேர்வாணையத்தின் மீது தவறான அல்லது அவதூறான குற்றச்சாட்டுகளை முறையீடாக தேர்வாணையத்திற்கோ அல்லது வேறு எந்த அதிகாரிக்கோ எழுதுதல்.

ஆகியவை கடுந்தவறாகக் கருதப்படும். இச்செயல்களுக்குக் காரணமாக உள்ள விண்ணப்பதாரர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் கலந்து கொள்ளும் உரிமையை நிரந்தரமாக அல்லது தேர்வாணையத்தினால் முடிவு செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

#### தேர்வுக்கூடத்தில் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள்

(i) தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல்.

(ii) மற்ற விண்ணப்பதாரர்கள் தன்னுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுத அனுமதித்தல்.

(iii) அச்சிடப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையினால் எழுதப்பட்ட அனுமதிக்கப்படாத புத்தங்கள் அல்லது குறிப்புகளிலிருந்து பார்த்து எழுதுதல்.

ஆகியவைகளாலும் விண்ணப்பதாரர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் அவர்களின் உரிமையை தேர்வாணையம் முடிவு செய்யும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

### 21. பதிலி எழுத்தரின் உதவி (Help of Scribes)

பார்வையற்ற விண்ணப்பதாரர் / ஊனமுற்றவர் (குறிப்பாகக் கைகள் ஊனமுற்றவர்) தவிர ஏனைய விண்ணப்பதாரர்கள், கொள்குறி வகை வினாத்தாள்களுக்கு (Objective Type Question Papers) விடையளிக்கும் போதும், விவரிக்கும் வகை வினாத்தாள்களுக்கு (Descriptive Type Question Papers) விடையளிக்கும்போதும் தன் கையாலேயே மையில் விடைகளைக் குறிக்கவேண்டும்/எழுத வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் அவர் ஓர் உதவியாளரின் (Scribe) உதவியோடு தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

#### பார்வையற்ற விண்ணப்பதாரர்

பார்வையற்ற விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உதவியாளருடன் (Scribe) தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்:-

(1) தேர்வாணையத்தின் அறிவிக்கைகளின்படி, பார்வையற்ற விண்ணப்பதாரர் ஒருவர், பணிக்காக விண்ணப்பிக்கும் போது அரசாங்க மருத்துவ அதிகாரியிடம் “இவர் முழுமையிலும் பார்வையற்றவர். இவரால் சுயமாக தேர்வு எழுத முடியாது” என்று அறிவிக்கும் ஒரு சான்றிதழ் பெற்று தேர்வாணையத்திற்கு அளிக்க வேண்டும்.

(2) விண்ணப்பத்தின் தலைப்பில், பெரிய எழுத்துக்களில் பார்வையற்றவரின் விண்ணப்பம் எனக் குறிக்க வேண்டும்.

(3) உதவியாளர்களை (Scribe) தேர்வாணையமே நியமித்து அவர்களுக்கு ஊதியமும் தேர்வாணையத்தாலேயே வழங்கப்படும்.

(4) பார்வையற்ற விண்ணப்பதாரர்கள், தலைமைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்கள் தேர்வு எழுதுவதற்கு அரை மணி நேரம் கூடுதலாக வழங்கப்படும்.

(5) பார்வையற்ற விண்ணப்பதாரர், தாம் வாய்மொழியாகக் கூறியதைத்தான் உதவியாளர் விடைத்தாள்களில் எழுதியுள்ளார் என்பதைப் பார்வையற்ற விண்ணப்பதாரர் உறுதி செய்ய, தன்னால் இதுவரை விடைத்தாள்களில் எழுதப்பட்டுள்ளதைப் பார்வையற்ற விண்ணப்பதாரருக்குத் தேர்வு முடிந்ததும் உதவியாளர் படித்துக் காட்டவேண்டும். பார்வையற்ற விண்ணப்பதாரர் இதற்கான உறுதிமொழி சான்றிதழை எழுத்து மூலமாக தேர்வாணைத்திற்கு வழங்க வேண்டும்.

(6) பார்வையற்ற விண்ணப்பதாரர் வாய்மொழியாகக் கூறும் அனைத்தும் ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்படும்.

**குறிப்பு**:- மேலே கூறப்பட்ட அறிவுரைகள் (1) மற்றும் (2)-ன் படி இல்லாத எந்த ஒரு விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்படும்.

#### உடல் ஊனமுற்றவர்கள், குறிப்பாக கைகள் ஊனமுற்றவர்கள்

உடலால் இயலாதவர்கள் (Physically disabled) முக்கியமாகக் கைகள் பாதிக்கப்பட்டவர்கள் தேர்வாணையத்தால் நடத்தப்படும் பலதரப்பட்ட போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் போது கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவியாளர் (Scribe) உதவியுடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

(1) உடலால் இயலாத குறிப்பாக கைகள் இயலாத, எல்லா விண்ணப்பதாரர்களும் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு உதவியாளர்கள் உதவியுடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

(2) உதவியாளர்களை (Scribe) தேர்வாணையமே நியமித்து அவர்களுக்கு உரிய தொகை தேர்வாணையத்தால் வழங்கப்படும். எனவே உடலால் இயலாத விண்ணப்பதாரர்கள் உதவியாளர்களுக்கென தனியே எந்தத் தொகையும் செலுத்தத் தேவையில்லை.

(3) உடலால் இயலாதவர்களுக்கு (குறிப்பாக கைகள் இயலாமை) உதவியாளர்களாக வருபவர்கள் உடலால் இயலாதவர்கள் பெற்றிருக்கும் அதே கல்வித் தகுதியையோ, அதற்கு ஈடான கல்வித் தகுதியையோ பெற்றிருத்தல் வேண்டும்.

(4) உதவியாளர்கள் (Scribe) நிரந்தரப் பணியின் அடிப்படையில் (Regular basis) முழு நேர அரசு ஊழியர்களாக நியமிக்கப்படமாட்டார்கள்.

(5) தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படும் உடலால் இயலாத அனைத்து விண்ணப்பதாரர்களும் தலைமைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

(6) தனது எந்தக் கையினாலும் எழுத இயலாத உடல் ஊனமுற்ற நபர்களுக்கு, தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளை உதவியாளரின் (Scribe) உதவியுடன் எழுத, அரைமணி நேரம் கூடுதலாக அளிக்கப்படும்.

**குறிப்பு:-** மாடி ஏற இயலாத ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் பிற விண்ணப்பதாரர்களுடன் சேர்ந்து கீழ்த்தளத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

**22. தெரிவு முறை:**

**(அ) தொகுதி - 1 பணிகளில் அடங்கிய பதவிகள்:**

தொகுதி - 1 பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான தெரிவு (1) முதனிலைத் தேர்வு (முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கத் தகுதியான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்வதற்கான தேர்வு) (2) முதன்மை எழுத்துத் தேர்வு (3) நேர்காணல் தேர்வு வடிவில் அமைந்த வாய்மொழித் தேர்வு ஆகிய அடுத்தடுத்த மூன்று நிலைகளைக் கொண்டிருக்கும். முதனிலைத் தேர்வு, முதன்மை எழுத்துத் தேர்வுக்கான விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்வு ஆகும். முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கத் தகுதியானவர்களாக அறிவிக்கப்படும் விண்ணப்பதாரர்கள், தமது முதனிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், அவர்களது தெரிவுக்கான இறுதித் தகுதியை முடிவு செய்வதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, அப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்படவுள்ள மொத்தப் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் போன்று பத்து மடங்கு இருக்கும். இது பணியிட ஒதுக்கீட்டு விதியைக் கருத்தில் கொண்டு முடிவு செய்யப்படும். எனினும், பணியிட ஒதுக்கீட்டுக்குரிய ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் 1:10 விகிதப்படி முதன்மை எழுத்துத் தேர்வுக்கு தெரிவு செய்யப்படுவதற்குரிய இறுதி விண்ணப்பதாரர் பெற்ற அதே மதிப்பெண்களைப் பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களும் முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர் அதனால் அனுமதிக்கப் படுவோரின் எண்ணிக்கை 1:10 விகிதத்தைச் சற்று மிஞ்சவும் நேரலாம்).

**(ஆ) எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் தேர்வு வடிவில் அமைந்த வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பதவிகள்**

எப்பதவிகளுக்கெல்லாம் முதன்மை எழுத்துத் தேர்வு/எழுத்துத் தேர்வு, வாய்மொழித் தேர்வு ஆகிய இரண்டின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படுகிறதோ அப்பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு வாய்மொழித் தேர்வுக்கு முன்னதாக நடைபெறும். ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) பொது வாய்ப்பு முறை ஆகிய பணியிட ஒதுக்கீட்டிற்குரிய வகுப்புப் பிரிவுகளுள், எந்தெந்தப் பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட/அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை ஐந்தாக அல்லது அதற்கு மேற்பட்டு இருக்கிறதோ, அந்தந்தப் பிரிவுகளில் வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, அக்குறிப்பிட்ட பிரிவுகளில் நியமனம் செய்யப்படவுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்காக இருக்கும். இதற்கான தெரிவு, விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் இருக்கும். அதுபோல, அதே நியமனத்திற்குரிய காலியிடங்கள் எந்தெந்த வகுப்புப் பிரிவுகளில் நான்காக அல்லது அதற்கும் குறைவாக உள்ளதோ, அந்தக் குறிப்பிட்ட பிரிவுகளில் வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, அப்பிரிவுகளில் நியமனம் செய்யப்படவுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்காக இருக்கும். நியமன ஒதுக்கீட்டு விதி பொருந்தாத, பணிநிலைப் பிரிவினர் எண்ணிக்கையாக ஒரேயொரு பணியிடத்தை மட்டும் கொண்ட பதவிகளைப் பொறுத்தவரை, எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நேர்காணல் தேர்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை மூன்றாக இருக்கும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் (தொகுதி - 1 பணிகளிலடங்கிய பதவிகளுக்கான தெரிவைப் பொறுத்தவரை முதன்மை எழுத்துத் தேர்விலும்) வாய்மொழித் தேர்விலும் சேர்த்து பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், பணியிட ஒதுக்கீட்டு விதி பொருந்துமெனில் அதனைப் பின்பற்றி இறுதித் தெரிவு செய்யப்படும். விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வின் அனைத்துப் பாடங்களிலும் வாய்மொழித் தேர்விலும் கலந்துகொள்வது கட்டாயமாகும். எழுத்துத் தேர்வின் ஏதேனுமொரு பாடத்தில் தேர்வெழுதாத (எழுதத் தவறியிருந்தாலும்) விண்ணப்பதாரர் அத்தெரிவுக்கான குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் கூட, தெரிவு செய்யப்பட தகுதியானவராகக் கருதப்பட மாட்டார்.

**வாய்மொழித் தேர்வில் பங்குபெற்ற விண்ணப்பதாரர்கள்**

வாய்மொழித் தேர்வில் பங்குபெற்ற விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் வாய்மொழித் தேர்விலும் பெற்ற மதிப்பெண்கள், அக்குறிப்பிட்ட பதவிக்கான வாய்மொழித் தேர்வுகள் நடைபெறும் நாட்களின் கடைசி நாளன்று மாலையோ, அதற்கடுத்த வேலை நாளன்றோ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திலுள்ள தகவல் பலகையில் ஒட்டப்படும். இம்மதிப்பெண்கள் கனினி தகவல் இணையம் (Internet) மூலமாக தேர்வாணையத்தின் வலைத்தளம் (website) www. tnpsc.gov.in -னிலும் வெளியிடப்படும்.

**(இ) எழுத்துத்தேர்வின் அடிப்படையில் மட்டுமே தெரிவு செய்யப்படும் பதவிகள்** இப்பதவிகளுக்கான தெரிவுகள், பணியிட ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி, விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு முடிவு செய்யப்படும். (இவற்றிற்கு வாய்மொழித் தேர்வு ஏதும் நடத்தப்பட மாட்டாது) :-

**23. எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் :**

அனைத்துப் பாடங்களுக்கான பாடத்திட்டங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 16.05.2001 நாளிட்ட செய்தி அறிவிப்பு வெளியீடு எண் 11-லும். அவ்வப்பொழுது அடுத்துவரும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீடுகளிலும் (**TNPSC Bulletin**) வெளியிடப்பட்டுள்ளன. அது எழுது பொருள் அச்சுத் துறை அலுவலகம், சென்னை -600 002ல், விற்பனைக்குக் கிடைக்கும் . மேலும், தேர்வாணையத்தின் இணையதளம் முகவரி (Commission’s website:) http://www.tnpsc.gov.in லும் கிடைக்கப் பெறும்.

# பிற்சேர்க்கை

## (அ) ஆதி திராவிடர் பட்டியல்

(ஆறாவது பத்தியைக் காண்க)

1. ஆதி ஆந்திரர்
2. ஆதி திராவிடர்
3. ஆதி கர்நாடகர்
4. அஜிலா
5. அருந்ததியர்
6. அய்யனவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
7. பைரா
8. பகூடா
9. பண்டி
10. பெல்லாரா
11. பரதர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
12. சக்கிலியன்
13. சாலாவாடி
14. சாமார், முச்சி
15. சண்டாளா
16. செருமான்
17. தேவேந்திர குலத்தான்
18. டோம், தொம்பரா, பைதி, பானே
19. தோம்பன்
20. கொடகலி
21. கொட்டா
22. கோசாங்கி
23. ஹோலியா
24. ஜக்கலி
25. ஜம்புவுலு
26. கடையன்
27. கக்காளன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
28. கல்லாடி
29. கணக்கன், பாடண்ணா (நீலகிரி மாவட்டத்தில்)
30. கரிம்பாலன்
31. கவரா (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
32. கோலியன்
33. கூசா
34. கூத்தன், கூடன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
35. குடும்பன்
36. குறவன்சித்தனார்
37. மாதாரி
38. மாதிகா
39. மைலா
40. மாலா
41. மன்னன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்
42. மாவிலான்
43. மோகர்
44. முண்டலா
45. நலகேயவா
46. நாயாதி
47. பாதண்ணன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
48. பகடை
49. பள்ளன்
50. பள்ளுவன்
51. பம்பாடா
52. பாணன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
53. பஞ்சமா
54. பன்னாடி
55. பன்னியாண்டி
56. பறையன், பறயன், சாம்பவார்
57. பரவன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
58. பதியன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
59. புலையன், சேரமார்
60. புதிரை வண்ணான்
61. ராணேயர்
62. சாமாகாரா
63. சாம்பான்
64. சபரி
65. செம்மான்
66. தாண்டன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
67. தோட்டி
68. திருவள்ளுவர்
69. வல்லோன்
70. வள்ளுவன்
71. வண்ணான் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
72. வாத்திரியன்
73. வேலன்
74. வேடன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
75. வெட்டியான்
76. வேட்டுவன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

## (ஆ) பழங்குடியினர் பட்டியல்

1. ஆதியன்
2. அரநாடான்
3. எரவள்ளன்
4. இருளர்
5. காடர்
6. கம்மாரா (கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டமும் நீங்கலாக)
7. காணிக்காரன்,காணிக்கர் (கன்னியாகுமரிமாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை மற்றும் அம்பாசமுத்திரம்வட்டங்களிலும்) (அரசாணை (பல்வகை) எண் 27 ப(ம)நி.சீ. (எஸ்) துறை, நாள் 13.3.09-ன் படி)
8. கானியான், கனியன்
9. காட்டுநாயகன்
10. கொச்சுவேலன்
11. கொண்டகாப்புகள்
12. கொண்டா ரெட்டிகள்
13. கொராகா
14. கோடா (கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டமும் நீங்கலாக)
15. குடியா, மேலக்குடி
16. குறிச்சன்
17. குறும்பர்கள்(நீலகிரி மாவட்டத்தில்
18. குறுமன்கள்
19. மகாமலசார்
20. மலை அரையன்
21. மலைப்பண்டாரம்
22. மலை வேடன்
23. மலைக்குறவன்
24. மலசார்
25. மலயாளி (தர்மபுரி, வேலூர், புதுக்கோட்டை, சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, நாமக்கல், கரூர்,பெரம்பலூர்மாவட்டங்களில்
26. மலயக்கண்டி
27. மன்னன்
28. மூடுகர், மூடுவன்
29. மூத்துவன்
30. பள்ளேயன்
31. பள்ளியன்
32. பள்ளியர்
33. பாணியன்
34. சோலகா
35. தோடர் (கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டமும் நீங்கலாக)
36. உரளி

## (இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்

பிற்படுத்தப்பட்டவகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபாண்மை நலத்துறையின் அரசாணைகள் எண்.85, நாள் 29.7.2008, எண்.97, நாள் 11.9.2008 மற்றும் எண்.37, நாள் 21.5.2009

1. அகமுடையார்,தொழு அல்லது துளுவ வெள்ளாளர் உட்பட
2. அகரம் வெள்ளாஞ்செட்டியார்
3. ஆழ்வார், அழவர் மற்றும் அளவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
4. சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் நீங்கலாக)
5. நுலயர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
6. அர்ச்சகரை வேளாளர்
7. ஆர்யவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
8. ஆயிர வைசியர்
9. படகர்
10. பில்லவா
11. பொண்டில்
12. போயர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர்,பெரம்பலூர்,புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் நீங்கலாக)

    பெத்தபோயர் (திருச்சிராப் -பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக)

    ஒட்டர்கள் (தஞ்சாவூர். நாகப்பட்டினம். திருவாரூர். திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக)

    கல் ஒட்டர்கள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சிராப் -பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்கள் நீங்கலாக)

    நெல்லூர்பேட்டை ஒட்டர்கள் (வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக)

    சூரமாரி ஒட்டர்கள் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் நீங்கலாக)

13. சக்காலா (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர்,

பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக)

14. சவலக்காரர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

15. செட்டு அல்லது செட்டி, (கோட்டார் செட்டி, ஏலூர் செட்டி பாத்திரச் செட்டி, வளையல் செட்டி, புதுக்கடை செட்டி உட்பட)(கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

16. சௌத்திரி

16A. கல்வி நிலையங்களில் இருக்கைகள் மற்றும் அரசுப் பணிகளின் இருக்கைகளுக்கும் இட ஒதுக்கீடு பெறும் நோக்கத் திற்காக தலைமுறையைப் பொருட்படுத்தாமல் ஆதிதிராவிடா வகுப்பினர் களிலிருந்து கிருத்துவராக மதம் மாறியவர்கள்

16B. தென்னிந்தியதிருச்சபை (முன்னாள் தெ.இ.கி.ஒ) (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

17. தொங்க தாசரிகள் (காஞ்சீபுரம், திருவள்ளுவர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சென்னை, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்கள் நீங்கலாக)

18. தேவாங்கர், சேடர்

19 தொம்மார்கள் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக)
தோமர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக)

20, ஏனாதி

21. எழவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

22. எழுத்தச்சர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

23. எழுவா (கன்னியாகுமரி மாவட்டத்திலும்,திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

24. கங்கவார்

25. கவரா, கவரை மற்றும் வடுகர் (வடுவர்) (கம்மா, காப்பு பலிஜா மற்றும் ரெட்டி இல்லாத பிற)

26. கௌண்டர்

27. கௌடா (கம்மாளர், கலாலி மற்றும் அனுப்ப கவுண்டர்)

28. ஹெறக்டே

29. இடிகா

30. இல்லத்துப் பிள்ளைமார், இல்லுவர், எழுவர் மற்றும் இல்லத்தார்

31. ஜெட்டி

32. ஜோகிகள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், மதுரை, தேனி, திண்டுக்கல், கடலூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக)

33. கப்போரா

34. கைக்கோளர், செங்குந்தர்

35. காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகபட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக)

36. களரி குருப், களரி பணிக்கர் உட்பட (கன்னியாகுமரி மாவட்டத்திலும்திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

37. கலிங்கி

38. கள்ளர், ஈசநாட்டுக் கள்ளர், கந்தர்வ கோட்டை கள்ளர்கள் உட்பட (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) கூத்தப்பால் கள்ளர்கள் (புதுக்கோட்டை. திருச்சிராப்பள்ளி. கரூர். பெரம்பலூர் மாவட்டங்கள்நீங்கலாக)

பிரமலைக் கள்ளர்கள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம். திருவரூர், மாவட்டங்கள் நீங்கலாக)

பெரிய சூரியூர் கள்ளர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக)

39. கள்ளர் குலத் தொண்டைமான்

40. கால்வேலி கௌண்டர்

41. கம்பர்

42. கம்மாளர் அல்லது விஸ்வகர்மா. விஸ்வகர்மாலா (தட்டார், பொற்கொல்லர், கன்னார், கருமார், கொல்லர், தச்சர், கல்தச்சர், கம்சாலா மற்றும் விஸ்வபிராமணர் உட்பட)

43. கணி, கணிசு, கனியர், பணிக்கர்

44. கனியால வேளாளர்

45. கன்னட சைனீகர். கன்னடியார் (மாநிலம் முழுவதிலும் மற்றும் தசபலான்ஜிகா (கோயம்புத்தூர். ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில்)

46. கன்னடியநாயுடு

47. கற்பூர செட்டியார்

48. கருணீகர் (சீர் கருணீகர், ஸ்ரீகருணீகர், சரடு கருணீகர், கைகட்டிக் கருணீகர், மாத்துவழிகணக்கர், சோழிக் கணக்கர் மற்றும் சுண்ணாம்பு கருணீகர்)

49. காசுக்கார செட்டியார்

50. கடேசர், பட்டம்கட்டி

51. கவுத்தியர்

52. கேரளமுதலி

53. கார்வி

54. கத்ரி

55. கொங்கு வைணவர்

56. கொங்கு வேள்ளாளர்கள் (வெள்ளாளக் கவுண்டர் நாட்டுக் கௌண்டர், நரம்புக் கட்டிக் கௌண்டர், திருமுடி வேளாளர், தொண்டு வெள்ளாளர், பாலக் கௌண்டர், பூசாரிக் கௌண்டர், அனுப்ப வேளாள கௌண்டர், குரும்பக் கவுண்டர், படைத்தலைக் கௌண்டர், செந்தலைக் கௌண்டர், பாவலங்கட்டி வெள்ளாளக் கௌண்டர், பால வெள்ளாளக் கௌண்டர், சங்கு வெள்ளாளக் கவுண்டர் மற்றும் ரத்தினகிரிக் கௌண்டர் உட்பட)

57. கோப்பல வேலமா

58. கோட்டேயர்

59. கிருஷ்னவாகா (கன்னியாகுமரி. மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

60. குடிகார வேளாளர்

61. குடும்பி (கன்னியாகுமரி. மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

62. குக வேளாளர்

63. குஞ்சிடிகர்

63A. இலத்தீன் கத்தோலிக்கர்கள் (கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இலத்தீன் கத்தோலிக்க வண்ணாரைத் தவிர)

63B. இலத்தீன் கத்தோலிக்கர்கள் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

64. லம்பாடி

65. லிங்காயத் (ஜங்கமா)

66. மராட்டிய (பிராமணரல்லாதோர்) நாம்தேவ் மராட்டியர் உட்பட

67. மலயர்

68. மாலி

69. மானியகார்

70. மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் நீங்கலாக) கருமறவர்கள், அப்பனாடு கொண்டையம் கோட்டை மறவர் உட்பட (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக) மற்றும் செம்பநாடு மறவர்கள் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலாக)

71. மூன்று மண்டை எண்பத்துநாலு (84) ஊர் சோழிய வேளாளர்

72. மூப்பன்

73. முத்துராசா, முத்துராச்சா, முத்திரியர், முத்தரையர்

74. நாடார், சாணார் மற்றும் கிராமணி (கிருத்துவ நாடார், கிருத்துவ சானார் மற்றும் கிருத்துவ கிராமணி உட்பட)

75. நகரம்

76. நாயக்கர் (கன்னியாகுமரி. மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

77. நான்குடி வேளாளர்

78. நாஞ்சில் முதலி (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

79. ஓடர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

80. ஓதியா

81. ஊற்று வளநாட்டு வேளாளர்

82. ஓ.பி.எஸ் வேளாளர்

83. உவச்சர்

84. பய்யூர் கோட்ட வேளாளர்

85. பாமுலு

86. பாணர் (இந்த இனம் ஆதிதிராவிடர் வகுப்பினராக இருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)

86A. பாண்டிய வெள்ளாளர்

87 நீக்கப்பட்டது

88. கதிகாரர் (கன்னியாகுமரி மாவட்டத்தில் )

89. பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தமச் செட்டியார்

90. பார்க்கவகுலம் (சுருதிமார், நத்தமார், மலயமார், மூப்பனார் மற்றும் நைனார் உட்பட)

91. பெருக்கி (பெரிகிபலிஜா உட்பட)

92. பெரும்கொள்ளர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)

93. பொடிகார வேளாளர்

94. பூலுவ கவுண்டர்

95. பொராயா

96. புலவர் (கோயம்பத்தூர், ஈரோடு மாவட்டங்களில்)

97. புள்ளுவர் அல்லது பூலுவர்

98. புசலா

99. ரெட்டி (கஞ்சம்)

100. சாதுச் செட்டி (தெலுங்குச் செட்டி, இருபத்து நான்கு மனைத் தெலுங்கு செட்டி உட்பட)

## (இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

101. சக்கரவார் அல்லது கவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
102. சாலிவாகனா
103. சாலியர், பத்மசாலியர், பட்டு சாலியர், பட்டாரியர் மற்றும் அடவியர்
104. சவலக்காரர்
105. சேனைத் தலைவர். சேனைக் குடியர்மற்றும் இல்லைவாணியர்

105A. சர்ரகுல வெள்ளாளர்

106. சௌராட்டிரா (பட்டுநூல்காரர்)
107. சோழிய வெள்ளாளர் (சோழ வெள்ளாளர், வெற்றிலைக்காரர், கொடிக்கால்காரர் மற்றும் கீரைக்காரர்)
108. ஸ்ரீசயர்
109. சுந்தரம் செட்டி
110. தொகட்டா வீரசத்திரியர்
111. தோல் கொல்லர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
112. தொளுவ நாய்க்கர் மற்றும் வெத்தலக்கார நாயக்கர்
113. நீக்கப்பட்டது.
114. தோரியர்
115. உக்கிரகுல சத்திரிய நாயக்கர்
116. உப்பாரா, உப்பில்லியா மற்றும் சகாரா
117. ஊராளிக் கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) மற்றும் ஒருடைய கவுண்டர் அல்லது ஊருடைய கவுண்டர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில்)
118. உரிக்கார நாயக்கர்

118A. வீரக்கொடி வெள்ளாளர்

119. வல்லம்பர்

119A. வல்லநாட்டு செட்டியார்

120. வால்மீகி
121. வாணியர், வாணியச் செட்டியார் (கண்டல, கனிகா, தெலிகுல மற்றும் செக்கலார் உட்பட)
122. வேடுவர் மற்றும் வேடர் (இச்சமூகத்தினர் ஆதிதிராவிடராக இருக்கும் கன்னியாகுமரி மாவட்டம் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
123. வீர சைவா (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
124. வேளர்
125. வெள்ளஞ்செட்டியார்
126. வெலுதொடத்து நாயர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
127. வொக்காலிகர் (வக்காலிகர், ஒக்காலிகர், கப்பிலியர், கப்பிலியா, ஒக்காலிக கௌடா, ஒக்காலிய கௌடா, ஒக்காலிய கவுடர், ஒக்காலிய கவுடா உட்பட)
128. வயநாடு செட்டி (நீலகிரி மாவட்டம்)
129. யாதவா (இடையர், வடுக ஆயர் அல்லது வடுக இடையர் அல்லது கொல்லா மற்றும் அஸ்தந்திர கொல்லா என அழைக்கப்படுகிற தெலுங்கு மொழி பேசும் இடையர் உட்பட)
130. யவன
131. ஏருகுலா

131A. எந்த ஒரு இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது சீர் மரபினர் இனங்களிலிருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள். (மீனவர், பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர், முக்குவார் அல்லது முகையர் மற்றும் பரவரிலிருந்து கிருத்துவ மதத்திற்கு மதம் மாறியவர்கள் நீங்கலாக)

132. 10 வயது அடைவதற்கு முன்னர் பெற்றோர்களை இழந்த ஆதரவற்றவர்கள், சட்டப்படி அல்லது வழக்கப்படி, தன் மீது அக்கறை கொள்ள எவருமில்லாதவர்கள், மற்றும் அரசால் அல்லது அரசால் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அல்லது அனாதை இல்லங்களில் சேர்க்கப்பட்ட ஆதரவற்றவர்கள்.

## (ஈ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் (இஸ்லாமியர்)

அரசாணை எண்.85, பிற்படுத்தப்-பட்டவகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சிறுபாண்மையினர் நலத்துறை, நாள் 29.7.2008

1. அன்சார்
2. தக்கானி முஸ்லீம்
3. துதிகுலா
4. லப்பைகள், இராவுத்தர் மற்றும் மரைக்காயர் உட்பட (அவர்கள் பேசும் மொழி தமிழாக அல்லது உருதுவாக இருப்பினும்)
5. மாப்பிள்ளா
6. ஷேக்
7. சையத்

## (உ) மிகவும் பிற்பட்ட வகுப்பினர் பட்டியல்

1. அம்பலகாரர்
2. ஆண்டிப்பண்டாரம்

2A. அரயர் (கன்னியாகுமரி மாவட்டத்தில்)

3. பெஸ்தா, சீவியர்
4. பட்ராஜு (சத்திரிய ராஜுக்கள் நீங்கலாக)
5. போயர், ஒட்டர்
6. தாசரி
7. தொம்மரா
8. எரவள்ளர் (இவ்வினத்தவர்கள் பழங்குடியினராகவுள்ள (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
9. இசை வேளாளர்
10. ஜம்புவானோடை
11. ஜங்கம்
12. ஜோகி
13. கொங்குச் செட்டியார் (கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மட்டும்)
14. கொரச்சா
15. குலாலா (குயவர், கும்பரர் உள்ளிட்ட)
16. குன்னுவர் மன்னாடி
17. குறும்பர்
18. குறுஹினி செட்டி

18A. இலத்தீன் கத்தோலிக்க கிருத்துவ வண்ணார் (கன்னியாகுமரி மாவட்டத்தில்)

19. மருத்துவர், நாவிதர், மங்கலா, வேலக்கட்டலவர், வேலக்கட்டல நாயர் மற்றும் புரோனோபகாரி
20. மோண்ட் கொல்லா
21. மவுண்டாடன் செட்டி
22. மகேந்திரா, மேதரா.
23. முட்டலகம்பட்டி.
24. நரிக்குறவர்.
25. நோக்கர்.

25A. பாணிசைவன்/பாணிசிவன்.

26. வன்னிய குலச் சத்திரியர் (வன்னியர், வன்னியா, வன்னியகவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாட்சி, பள்ளி மற்றும் அக்னிகுல சத்திரியர் உட்பட)
27. பறவர் (இச்சமுதாயத்தினர் பட்டியல் வகுப்பினராக உள்ள (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) கிருத்துவ மதத்திற்கு மாறியவர் உட்பட
28. மீனவர் (பர்வதராஜகுலம், பட்டனவார், செம்படவா கிருத்துவ மதத்திற்கு மாறியவர் உட்பட)
29. முக்குவார் அல்லது முகயர் (கிருத்துவ மதத்திற்கு மாறியவர் உட்பட)
30. புன்னன், வேட்டுவ கௌண்டர்
31. பண்ணையார் (கன்னியாகுமரி, மாவட்டத்தில் கதிகாரர் நீங்கலாக)
32. சதாதஸ்ரீவைஷ்ணவ (சதானி, சட்டாடி மற்றும் சட்டாட வைஷ்ணவ உட்பட)
33. சோழிய செட்டி
34. தெலுங்குப் பட்டி செட்டி
35. தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவார், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட)
36. தொண்டைமான்

36A. தொரையார் (நீலகிரி)

36B. தொரையார் (சமவெளி)

37. வலையர் (செட்டிநாடு வலையர்கள் உட்பட)
38. வண்ணார் (சலவைத் தொழிலாளர்) (அகசா, மடிவளா, ஏகாலி ராஜகுல வேலுத்தடார் மற்றும் ராஜாகா உட்பட) இச்சமூகத்தினர் ஆதிதிராவிடர் வகுப்பினராக இருக்கும் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
39. வேட்டைக்காரர்.
40. வேட்டுவ கௌண்டர்.
41. யோகீஸ்வரர்.

## (ஊ) தமிழ்நாடு மாநிலம் முழுவதும் உள்ள சீர்மரபினர் பட்டியல்

(அரசாணை எண்.85, பிற்படுத்தப்- பட்டவகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சிறுபாண்மையினர் நலத்துறை, நாள் 29.7.2008)

| | | |
|---|---|---|
| 1. ஆத்தூர் கீழ்நாடு குறவர்கள் | - | சேலம் நாமக்கல் கடலூர் விழுப்புரம் இராமநாதபுரம் சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் |
| 2. ஆத்தூர் மேல்நாடு குறவர்கள் | - | சேலம், நாமக்கல் மாவட்டங்கள் |
| 3. ஆப்பநாடு கொண்டயம்கோட்டை மறவர் | - | சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் |
| 4. அம்பலகாரர் | - | தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 5. அம்பலக்காரர் | - | சூரியனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 6. போயர்கள் | - | திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 7. பட்டுதுர்காஸ் | | |
| 8. சி. கே. குறவர்கள் | - | கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 9. சக்கலா | - | சிவகங்கை, விருதுநகர்,இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |

10. சங்கயம்புடி குறவர்கள் - வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்
11. செட்டிநாடு வலையர்கள் - சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்
12. தொம்பர்கள் - புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்
13. தொப்ப குறவர்கள் - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்
14. தொம்மர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்
15. தொங்கபோயர்
16. தொங்கஊர்கொறச்சார்கள்
17. தேவகுடிதலையாரிகள்
18. தொப்பை கொறச்சாக்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்
19. தாபி குறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்
20. தொங்கதாசரிகள் - காஞ்சீபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி,கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சென்னை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்
21. கொரில்லா தொட்டபோயர்
22. குடு தாசரிகள்
23. கந்தர்வகோட்டை குறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்
24. கந்தர்வகோட்டை கள்ளர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்
25. இஞ்சிக் குறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்
26. ஜோகிகள் - காஞ்சீபுரம், திருவள்ளூர்அரசாணை எண்.85, பிற்படுத்தப்- பட்டவகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 29.7.2008, சென்னை, கடலூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்
27. ஜம்பவனோடை
28. காலடிகள் - சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்
29. கல் ஒட்டர்கள் - காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி,கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்
30. குறவர்கள் - காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம். திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சென்னை, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.
31. களிஞ்சி தாபி குறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
32. கூத்தப்பால் கள்ளர்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
33. கல குறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம். திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
34. கலவதிலா போயர்கள்
35. கேப்மாரிகள் - காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்.
36. மறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்.
37. மொந்த குறவர்கள்
38. மொந்த கொல்லா - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்.
39. முடலகம்பட்டி - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்
40. நோக்கர்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
41. நெல்லூர்பேட்டை ஒட்டர்கள் - வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.
42. ஒட்டர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்.
43. பெத்த போயர்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
44. பொன்னை குறவர்கள் - வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.
45. பிரமலைக்கள்ளர்கள் - சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்.
46. பெரிய சூரியூர் கள்ளர்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
47. படையாச்சி - கடலூர் மாவட்டத்தில் வெள்ளையன்குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர்.
48. புன்னன் வேட்டுவ கவுண்டர் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
49. சேர்வை - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
50. சேலம் மேல்நாடு குறவர்கள் - மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், சேலம் நாமக்கல், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.
51. சேலம் உப்பு குறவர்கள் - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்.
52. சக்கரைத்தாமடை குறவர்கள் - வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.
53. சாரங்கபள்ளி குறவர்கள்.
54. சூரமாரி ஒட்டர்கள் - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்.
55. செம்பநாடு மறவர்கள் - சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்
56. தல்லி குறவர்கள் - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்.
57. தெலுங்கபட்டி செட்டிகள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
58. தொட்டிய நாயக்கர்கள் - சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர்,திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்.
59. தோகமலைக்குறவர்கள் அல்லது கேப்மாரிகள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
60. உப்புகுறவர்கள் அல்லது செட்டிபள்ளி குறவர்கள் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.
61. ஊராளி கவுண்டர்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
62. வயல்பாடு அல்லது நவல்பேட் கொராச்சர்கள்
63. வடுவர்பட்டி குறவர்கள் - மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
64. வலையர்கள் - மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள்.
65. வேட்டைக்காரர் - தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
66. வேட்டா குறவர்கள் - சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள
67. வரகநேரி குறவர்கள் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்
68. வேட்டுவக் கவுண்டர் - திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை- 600 002.
**நாள்: 22.10.2009.**

**ரமேஷ் சந்த் மீனா இ.ஆ.ப.,**
செயலாளர்

1747/RND-D3/2007